https://arimanokku.com/ UGC-CARE LISTED AND PEER REVIEWED JOURNAL
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

19-3 July 2025

Published on 14, July-2025 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# இலக்கியங்களில் தகவல் தொடர்பியல்

**ந. மஞ்சுளா**
ஆய்வாளர், தமிழ்த்துறை
பூ.சா.கோ. கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கோவை- 641 014

**முனைவர் இரா. செல்வி**
நெறியாளர், தமிழ்த்துறை
பூ.சா.கோ. கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கோவை-641 014

## ஆய்வுச் சுருக்கம்

*பிறரைப் பற்றி அறிவதில் மனிதனுக்கு இருந்த ஆர்வம் தகவல் தொடர்பு தோன்றுவதற்குக் காரணமாக இருந்தது எனலாம். இலக்கியங்களில் தகவல் தொடர்பியல் என்பது இலக்கிய நூல்கள் மூலம் எவ்வாறு செய்திகள் கருத்துக்கள் மற்றும் தகவல்கள் பரிமாறப்படுகின்றன என்பதை பற்றிய ஆய்வாகும். இலக்கியம் ஒரு காலத்தில் இருந்து இன்னொரு காலத்திற்கு தகவலை கடத்த உதவுகிறது. இலக்கியம் சமூக மாற்றத்திற்குக் காரணமாக அமைகிறது. தொண்ணூற்றாறு வகை சிற்றிலக்கியங்களில் ஒன்றாகிய இலக்கிய வடிவம் தூது இலக்கியம் தகவல் தொடர்பின் ஒரு பகுதியாகும். தலைவன் அல்லது தலைவி தங்கள் காதலின் தன்மையை எடுத்துக் கூறும் பொருட்டும், பிரிந்திருக்கும் போது தங்கள் துயரத்தை வெளிப்படுத்தும் பொருட்டும் அஃறினைப் பொருட்களைத் தூதாக அனுப்புவர். சிலப்பதிகாரத்தில் கடிதம் அனுப்பிய நிகழ்ச்சியை இளங்கோ இரண்டு இடங்களில் குறிப்பிட்டுள்ளார். இதுவும் தகவல் தொடர்பின் ஒரு கூறாகும். அதியமான் என்ற மன்னனுக்காக ஔவையார் தொண்டைமான் இளந்திரையன் என்ற மன்னனிடம் போர் மேற்கொள்ள வேண்டாம் என்று வலியுறுத்தும் வகையில் தூது சென்றார். இவ்வாறாக வளர்ந்த தகவல் தொடர்பியல் இன்று எங்கோ ஒரு மூலையில் நடக்கும் செய்தியை அடுத்த நொடியிலேயே மக்களிடம் கொண்டு சென்று அடையும் வகையில் தகவல் தொடர்பு வளர்ச்சி நிலைகளை அடைந்துள்ளது .*

## திறவுச் சொற்கள்

*தகவல் தொடர்பு - இலக்கியங்களில் தகவல் தொடர்பியல்-வரலாற்றுக்கு முற்பட்ட நிலை- சமூக மாற்றம்- தூது இலக்கியம்-சிலப்பதிகாரம்- கம்பராமாயணத்தில் தூது- புறநானூற்றில் தூது.*

## அறிமுகம்

மக்களுக்குக் கருத்துக்களையும் செய்திகளையும் குறியீடுகளின் வழியாகவோ

வாய்மொழியாகவோ படங்களின் வழியாகவோ மரபுச் சாதனங்களின் வழியாகவோ அறிவித்து, நேரடியாகவோ மறைமுகமாகவோ மக்களை தொடர்பு கொள்வது தகவல் தொடர்பு எனப்படும். இலக்கியங்களில் தகவல் தொடர்பியல் என்பது இலக்கிய நூல்கள் மூலம் எவ்வாறு செய்திகள் கருத்துக்கள் மற்றும் தகவல்கள் பரிமாறப்படுகின்ன என்பதை பற்றிய ஆய்வாகும். இலக்கிய நூல்களில் செய்திகள் எவ்வாறு ஒருவரிடம் இருந்து மற்றவருக்கு பரிமாறப்படுகின்றன, பகிரப்படுகின்றன என்பது பற்றியும் ஆராய்வதாகும்.

## தகவல் தொடர்பு - விளக்கம்

மக்கள் தகவல் தொடர்பு - மாஸ் கம்யூனிகேஷன் என்பது ஊடகங்கள் வழியாக பொது மக்களுக்கு தகவல்களை பரிமாற்றம் செய்யும் துறையை குறிக்கும். தொடர்பியல் என்னும் சொல்லிற்கு பொதுமையாக்குதல் என்பது பொருளாகும். அனுப்புனருக்கும் பெறுனருக்கும் இடையே நிகழும் செய்தி பரிமாற்ற முறையே தொடர்பு எனப்படும். தொழில் துறை சார்ந்த சமுதாயத்தில் நிறுவனமயமாக்கப் பட்ட தொழில்நுட்பத் திறனின் உதவியோடு மக்களுக்கு வழங்குவதற்காக பொதுத் தகவலை தயாரிக்கும் முறையே மக்கள் தகவல் தொடர்பியல் எனப்படும்.

## வரலாற்றுக்கு முற்பட்ட நிலை

தனி மனிதன் ஒரு குழுவாக சமுதாயமாக வாழ தொடங்கிய நாள் முதல் மற்றவர்களு டன் தொடர்பு கொள்ள வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. தன் கருத்தை தெரிவிக்கவும் பிறர் கருத்தை தான் அறிந்து கொள்ளவும் தன்னைச் சுற்றிலும் நடக்கும் நிகழ்வுகளை அறிந்து கொள்ளவும் மக்கள் ஒருவருடன் ஒருவர் தொடர்பு கொண்டனர். பிறரை பற்றி அறிவதில் மனிதனுக்கு இருந்த ஆர்வம் தகவல் தொடர்பு தோன்றுவதற்குக் காரணமாக இருந்தது எனலாம்.

**எல்லாருக்கும் எல்லாம் நிகழ்பவை**
**எஞ்ஞான்றும்**
**வல்லறிதல் வேந்தன் தொழில்**[1] (குறள்-582)

என்னும் குறட்பாவின் மூலம் ஒரு அரசன் நாட்டு நடப்புகளை அறிந்து கொள்வதன் முக்கியத்துவத்தினை உணர்த்துகிறது. மொழி தோன்றுவதற்கு முன்பாக உடலசைவுகள், ஒலிகள், புகை எழுப்புதல், பறையடித்தல், மணி அடித்தல், தீ அம்புகளை வானில் எறிதல் போன்றவற்றின் வழியாக தன்னைச் சுற்றியுள்ள வட்டார மக்களுக்குத் தேவையான செய்திகளை அனுப்பினான்.

## தகவல் தொடர்பியலின் பணி

ஒரு செயல் இயற்கையாக நடந்தாலும் அல்லது செயற்கையாக நடந்தாலும் அதைப்பற்றிய பதிவினை மக்கள் மத்தியில் பரப்புவது என்பதே ஊடகத்தின் பணியாக உள்ளது. தொடக்க காலத்தில் அச்சு வழி என்பது மட்டுமே ஊடகமாக இருந்தது. தற்போது அச்சு, வானொலி, தொலைக் காட்சி, இணையம் போன்றவற்றின் வழியாக செய்திகள் வெளிவரும் நிலையில் பல்வேறு பரிணாமங்களைப் பெற்றுள்ளது எனலாம். தகவல் பரப்புதல் என்பது பொதுப் பணியாக இருந்தாலும் ஊடகங்கள் பல சிறப்பான பணிகளை செய்து வருகிறது. கருத்துக்களை கட்டமைப்பது, மனிதர்களின் இருப்பை சமுதாயத்தின் இயல்பை எடுத்துக்காட்டுவது, சந்தைப் பொருளாதார மதிப்பை தீர்மானிப் பது, அரசியல், தத்துவம், அறிவியல், சட்டம், மருத்துவம், பொறியியல் போன்ற பல்துறை சார்ந்த நிகழ்வுகளைத் தொகுப்பது போன்ற பணிகளைச் சிறப்பாக செய்து வருகிறது எனலாம்.

## தகவல் தொடர்பின் முக்கியத்துவம்

தகவல் தொடர்பு இலக்கியத்தில் ஒரு முக்கியமான கூறாகும். அது எழுத்தாளர் கதாபாத்திரங்கள் மற்றும் வாசகர்களுக்கி டையே தகவல்களை பரிமாற உதவுகிறது. இலக்கியம் ஒரு காலத்தில் இருந்து இன்னொரு காலத்திற்கு தகவலை கடத்த உதவுகிறது. இலக்கியம் சமூக மாற்றத்திற்குக் காரணமாக அமைகிறது. படைப்பாளர் களின் படைப்புகள் வாசகர்களுடன் உணர்வுப்பூர்வமாகத் தொடர்பு கொள்ள உதவுகின்றன.

## தூது இலக்கியம்

தகவல் தொடர்பின் ஒரு பகுதியான தூது இலக்கியம் தொண்ணூற்றாறு வகை சிற்றிலக்கியங்களில் ஒன்றாகிய இலக்கிய வடிவம். தலைவன் அல்லது தலைவி தங்கள் காதலின் தன்மையை எடுத்துக் கூறும் பொருட்டும், பிரிந்திருக்கும் போது தங்கள் துயரத்தை வெளிப்படுத்தும் பொருட்டும் அஃறிணைப் பொருட்களைத் (பறவை, விலங்கு, அன்னம், மேகம், காற்று) தூதாக அனுப்புவர்.

**பயில் தரும் கலிவெண்பாவினாலே உயர்திணைப் பொருளையும் அஃறினைப் பொருளையும் சந்தியின் விடுதல் முந்துரு தூது[2]** *(இலக்கண விளக்கம்- பா-874)*

மதுரையில் கோயில் கொண்டிருக்கும் இறைவன் சொக்கநாதர் மீது காதல் கொண்ட தலைவி, இறைவன் மீது தான் கொண்டுள்ள காதலின் மேன்மையை உணர்த்தும் பொருட்டு தமிழ் மொழியைத் தூதாக அனுப்புகிறாள். தான் தூதாக அனுப்பும் தமிழ் மொழியின் பெருமைகளை எடுத்தியம்பும் வகையில் அமைந்தது தமிழ்விடு தூது. ஒரு பொருளை தூதாக அனுப்பும் போது அப்பொருளின் மேன்மைகளை எடுத்து இயம்புவது தூது இலக்கியத்தின் தனித்தன்மையாகும்.

**அரியாசனம் உனக்கே ஆனால் உனக்கு**
**சரியான உண்டோ தமிழில்[3]**
*(தமிழ் விடு தூது: பா-62)*

## இலக்கியத்தில் தகவல் தொடர்பு

அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவரான சுந்தரர் திருவொற்றியூர் ஆலய தரிசனத்திற்காக வந்த போது சங்கிலி நாச்சியாரிடம் காதல் வயப்பட்டார். தனக்கும் சங்கிலி நாச்சியாருக்கும் திருமணம் செய்து வைக்கும்படி இறைவனை வேண்ட இறைவன் சங்கிலி நாச்சியாரிடம் சென்று சுந்தரரை மணந்து கொள்ளும்படி அருளினார்.

தன் மாளிகைக்குள் விட மறுத்த பறவை நாச்சியாரின் செயலால் மனம் நொந்த சுந்தரர் திருவாரூர் தியாகேச பெருமானைச் சரணடைந்து தனக்காக பறவை நாச்சியாரிடம் தூது செல்லும்படி வேண்டினார். இறைவன் பறவையாரிடம் சமாதானம் பேசினார் பறவை நாச்சியார் அதனை ஏற்காத சூழ்நிலையில் சுந்தரரின் பக்திக்கு இணங்கி நள்ளிரவில் தன் சுய உருவத்துடன் பூதகணங்கள், தேவர்கள், முனிவர்கள் சூழ நடந்து வந்து பறவை நாச்சியாரின் மாளிகையின் முன்பாக திருக்கைலாய மலையில் வீற்றிருப்பது போல காட்சி அளித்தார். தனது வீட்டின் முன்பாக இறைவனைக் கண்ட பறவை நாச்சியார் இறைவனது அடிகளில் விழுந்து வணங்கினார். பெருமானே தாங்கள் திருவடி நோக திருவாரூர் வீதியில் நடந்து வந்ததைக் கண்ட பிறகும் நான் இசையாது இருப்பேனா! நாங்கள் கூடி வாழ்கிறோம் என்று இறைவனிடம் உறுதி கூறினார்.

**முன் செய்த அருள் வழியே முருக**
**பூங்குழல் பறவை தன் செய்ய வாயில் நகை**
**தவறாமல் தாரும் என** *(பெரி. பு : பா-3286)*

இவ்வாறாக இறைவனேத் தூதுவனாகச் சென்ற செய்தியை காணும் போது தூதின் முக்கியத்துவம் வெளிப்படுகிறது எனலாம்.

## மாதவி வரைந்த மாண்புறு கடிதங்கள்

சிலப்பதிகாரத்தில் கடிதம் அனுப்பிய நிகழ்ச்சியை இளங்கோ இரண்டு இடங்களில் குறிப்பிட்டுள்ளார். இரண்டு கடிதங்களும் மாதவியால் கோவலனுக்கு எழுதப்பட்டவை. இவ்விரண்டு கடிதங்களும் இரு வேறுபட்ட பாத்திரப் பண்பை விளக்குகிறது.

**வயந்தமாலை கொண்டு வந்த முதல் கடிதத்தில்**

**மன்னுயிர் எல்லாம் மகிழ்துணை புணர்க்கும்**
**இன் இளவேனில் இளவரசாலன்**
**அந்தி போதகத்து அரும்பிடர்த் தோன்றிய**
**திங்கட் செல்வநும் செவ்வியன் அல்லன்**
**புணர்ந்த மாக்கள் பொழுது இடைப் படுப்பினும்**
**தனந்த மாக்கள் தம் துணை மறுப்பினும்**
**நறும் பூ வாளியின் நல் உயிர் கோடல்**
**இரும்பூது அன்று அறிந்தீமின்[5]**
*(சிலம்பு-பா-56-63)*

உலக உயிர்களைத் துணையோடு சேர்க்கும் இளவேனிற் காலம் வந்தது, மலையில் தோன்றிய சந்திரனும் பிரிவுத் துயரை மிகுவிக்கிறான், காமன் மலர் அம்புகளால் உயிரைக் கொல்லும் ஆட்சி தொடங்குகிறது, அறிந்து கொள்க என முதல் கடிதத்திலும், கோசிகன் கொண்டு வந்த இரண்டாம் கடிதத்தில் அடிகளின் திருவடிகளை வணங்குகிறேன், நான் எழுதியுள்ள கடிதத்தை மனதில் கொள்வீராக! பெற்ற வருக்குப் பணிவிடை செய்யாது அவர்களின் கட்டளை இன்றி உயர்குலக் கொடியாகிய கண்ணகியோடு இரவில் நகரை விட்டு பிரிவதற்கு நான் செய்த பிழையாது? என எண்ணி என் மனம் வருந்துகிறது. எனது துன்பத்தைப் போக்குவீராக எனவும் மாதவி அக்கடிதத்தில் குறிப்பிட்டிருந்தாள்.

**அடிகள் முன்னர் யானடி விழுந்தேன்**
**வடியாக் கிளவி மனம் கொளல் வேண்டும்**
**குறவர் பணி அன்றியும் குலப்பிறப் பாட்டி யோடு**
**இரவிடை கழிதற்கு என் பிழைப்பு அறியாது;**
**கையறு நெஞ்சம் கடியல் வேண்டும்**[6]
*(சிலம்பு-பா85-91)*

என்று பற்றற்ற நிலையில் மாதவி எழுதிய கடிதத்தை படித்துணர்ந்து மாதவி குற்றமற்ற வள், இது என் குற்றமே எனக் கூறி மனம் வருந்தினான் கோவலன். மாதவி தனக்காக எழுதிய கடிதத்தினை ஒரு சொல்லும் வேறுபடாது தான் தன் பெற்றோருக்குத் தெரிவிக்கத்தக்கதாக உள்ளதை அறிந்தான்.

**என் பயந்தார்க்கு**

**இம்மண்ணுடை முடங்கல்**
**பொற்புடைத்தாகப்**
**பொருள் உரை பொருந்தியது**
**மாசில் குறவர் மலரடி தொழுதேன்**
**கோசிகாமணி காட்டு**[7] *(சிலம்பு- பா-96-100)*

எனக்கோரி, கடிதத்தை தன் பெற்றோரிடம் ஒப்படைக்குமாறு கூறினான். சிலப்பதிகார த்தில் உள்ள இந்த இரு கடிதங்களும் அன்றைய காலகட்டத்தில் மக்களின் மனத்தினை வெளிப்படுத்தும் ஒரு சாதன மாக கடிதப் பயன்பாடு இருந்தது தெரிய வருகிறது.

### தூதுவனாக அனுமன்

கம்பராமாயணத்தில் இராவணனால் சிறை வைக்கப்பட்ட சீதாப்பிராட்டியை மீட்பதற் காக அனுமன் தூதுவனாக செல்கிறான். அப்போது அங்கே சீதைக்கும் அனுமனுக்கும் நடந்த சொற்போரானது ஒரு தூதுவனது பணியை செவ்வனே எடுத்து இயம்புகின்றது எனலாம்.

**'திங்கள் ஒன்று நீங்கள் இங்கு தங்கி இருக்கத் தேவையில்லை'** என்று அனுமன் கூறிய வார்த்தைகள் சீதையின் மனத்தில் ஒரு தன்னம்பிக்கையை ஏற்படுத்தியது. கணையாழியை கொடுத்து அனுப்பிய ராமனுக்கு தன் தலையில் சூடி இருந்த சூடாமணியை தூதுவனிடம் கொடுத்து அனுப்பினாள்.

### சங்க இலக்கியத்தில் தகவல் தொடர்பியல்

பொருளை ஈட்டுவதற்காகப் பிரிந்து சென்ற தலைவனை எண்ணியும் வரைவு நீட்டித்தவலி வருத்தம் கொள்ளும் தலைவியை ஆற்றுப் படுத்துவதற்காகவும் தோழி செயல்படுவது தகவல் பரிமாற்றத்தின் தன்மையின் அடிப் படையில் அமைந்துள்ளது எனலாம். தோழி தலைவியிடம் தகவல் பரிமாறும் பொழுது பல்வேறு பொருட்களையும் கால நிலைகளை யும் எடுத்துக் கூறி தலைவியின் கோபத்தையும் மனத்தையும் தேற்றுவதாக அமைந்துள்ளது.

**உள்ளார் கொள்ளோ தோழி**
**கள்வர் பொன் புனைப் பகலி செப்பம்**
**கொன்மார் உகிர்நுனி புரட்டும்**
**ஓசை போல செங்காற் பல்லி**
**தன் துணைப் பயிறும் அங்காற்**
**கள்ளிலும் காடு இறந்தோரே!**[8]
*(குறுந்தொகை -பா-16)*

என்னும் குறுந்தொகை பாடலில் பொருள் ஈட்டுவதற்காக பிரிந்த தலைவனை எண்ணி தலைவி மிகவும் வருந்தினாள். அதைக் கண்ட தோழி நம் தலைவர் கள்ளிச்செடிகள் நிறைந்த காட்டிடைச் சென்றுள்ளார். அவ்வாறு அங்கு செல்லும் வழியில் ஆண் பல்லி தனக்குத் துணையாகிய பெண்

பல்லியை அழைக்கும். அதனைக் கேட்டு தலைவர் விரைந்து வருவார், என்று தோழி தலைவிக்கு தன் தகவலை வெளிப்படுத்து வதாக அமைந்துள்ளது. தலைவன் தலைவி யின் காதலை பலர் பழிச்சொல் தூற்றினர். அதனைப்பொறுக்க முடியாமல் வருந்தினாள் தலைவி. அதற்குத் தோழி நம் ஊர் எல்லா வளமும் உடையது, நீர் துறையும் இனிமையுடையது, நம்முடைய காதலரின் தேரொலியைக் கேட்பது மட்டும் தான் அரிதாகின்றது. அது மட்டுமே நம் உயிருக்கு வலி உடையதாக இருக்கின்றது. தலைவன் நம்மை வந்து சேர்ந்து விட்டால் அச்சோலை யும் மிக நல்லதாய் மாறும் எனக் கூறி ஆறுதல் படுத்துகிறாள்.

**துறுகல் மீமிசை உறு கண் அஞ்சா**
**குறக்குறுமார்கள் புகழ்ச்சியின் எரிந்த**
**தொண்டகச் சிறுபறை பணி அயலது**[9]

(நற்றிணை : பா-104)

ஐந்திணை ஐம்பதில் தலைவி தோழியிடம் தலைவன் சென்றது மிகவும் கொடிய பாலை நிலம் பிரிவாற்றியிருப்பது என்னுடைய கடமை. ஆனால் அவர் சென்ற பாலை நிலத்தை நினைத்து என் மனம் வேதனை அடைகிறது. என்று தலைவி தோழியிடம் இயம்பினாள்.

**கொடுவில் எயினர் தம் கொள்படையால்**
**தடிறின மாற்றிய போய் – நடுகல்**
**விரிநிழல் கண்படுக்கும்வெங்கானம் என்பர்**
**பொருள் புரிந்தார் போய தரம்".**[10]

(குறுந்தொகை: பா-12)

## புறநானூற்றில் தூது

அதியமான் என்ற மன்னனுக்காக ஔவை யார் தொண்டைமான் இளந்திரையன் என்ற மன்னனிடம் போர் மேற்கொள்ள வேண்டாம் என்று வலியுறுத்தும் வகையில் தூது சென்றார்.

**இவ்வே பீலி அணிந்து மாலை சூட்டிக்**
**கண் திறல் நோன்கால் திருத்தி செய் அணிந்து**
**கடிவுடன் அவ்வே, அவ்வே**
**பகைவர் குத்திக் கொடுநுதி சிதைந்து**
**கொள் துறை கூற்றில்"**[11] (புறநானூறு:பா-95)

என்ற பாடலில் அதியமானின் படைபலமும் வீரமும் வெளிப்படும் வகையில் அமைந்து ள்ளது. ஒரு போரையே நிறுத்தும் வகையில் ஔவையாரின் தூது அமைந்துள்ள பான்மையை காணும் பொழுது தூதின் முக்கியத்துவம் வெளிப்படுகிறது.

## முடிவுரை

மனிதன் ஆரம்ப நிலையில் செய்கைகள் மூலமாகவும் குறியீடுகள் மூலமாகவும் செய்தியை உணர்த்தி வந்தான். சங்க இலக்கியங்களில் புறாக்கள் போன்ற அஃறினைப் பொருட்கள் மூலமாகவும் தோழன், தோழி, பாங்கன், பாங்கி, செவிலித்தாய் போன்றோர் மூலமாக செய்தி கள் பரப்பப்பட்டன. இவ்வாறாக வளர்ந்த தகவல் தொடர்பியல் இன்று எங்கோ ஒரு மூலையில் நடக்கும் செய்தியை அடுத்த நொடியிலேயே மக்களிடம் கொண்டு சென்று அடையும் வகையில் தகவல் தொடர்பு வளர்ச்சி நிலைகளை அடைந்துள்ளது.

## துணை நூல் பட்டியல்

1. திருக்குறள், பரிமேலழகர் உரை, சாரதா பதிப்பகம், சென்னை- 600014
2. சிலப்பதிகாரம், புலியூர் கேசிகன் உரை, சாரதா பதிப்பகம், சென்னை- 600014
3. புறநானூறு, கழக வெளியீடு, சைவ, சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 1/140.பிரகாசம் சாலை, சென்னை -1
4. இதழியல் கலை, என். வி.கலைமணி, Coral பப்ளிஷர்ஸ், 8. மெயின் ரோடு வாசவி நகர், சென்னை-600109
5. தமிழ்விடு தூது - மூலமும் உரையும், டாக்டர் க. தி. முருகேசன், சாரதா பதிப்பகம், சென்னை- 600014
6. அருணா பப்ளிகேஷன்ஸ், ஜகனதா நகர் வடக்கு, வில்லிவாக்கம், சென்னை-600049
7. இதழியல் கலை, டாக்டர் மா. பா. குரு சாமி, குரு. தே. மொழி பதிப்பகம், சென்னை
8. புறநானூறு தெளிவுரை, புலியூர் கேசிகன், ஸ்ரீ செண்பகா பதிப்பகம்.